[27th February 1964

திரு. அ. ராகவ ரெட்டி: சார், இந்த ஹைவேஸ் ரிசர்ச் ஸ்டேஷனில் ரிடையர் ஆன ஒருவரை இவ்வளவு நாட்களாக வைத்துக் கொண்டிருப்பதற்கு பிரத்யேக காரணம் என்ன? மறுபடியும் உத்தியோகம் கொடுத்து, இதர சலுகைகளும் கொடுப்பதற்கு பிரத்யேக காரணம் என்ன?

கனம் திரு. வெ. ராமைய்யா: அவர்கள் தொடர்ந்து இந்த ஆராய்ச்சி நிலையத்தில் இருப்பதற்குக் காரணம், அவர்கள் ஈடுபட்டிருந்த ஆராய்ச்சிகள் சம்பந்தப்பட்ட வேலை இன்னும் முடிவடையவில்லை. அந்த வேலை தொடர்ந்து செய்யப்படுவதால் இந்த மாநிலத்தின் நன்மைக்கு அவசியமாக இருக்கிறது என்பது தான்.

*100 *Q.*—SRI K. CHEEMAICHAMY (on behalf of Sri P. K. MOOKIAH THEVAR): Will the Hon. the Minister for Works be pleased to state what is the channel of purchase of the articles required in the Highways Research Station and its allied offices?

THE HON. SRI V. RAMAIAH: The equipment required are purchased by inviting open tenders on all-India basis by advertising in leading dailies. In the case of special equipment, which are to be imported from abroad, indents are placed through the Director-General of Supplies and Disposals, the India Stores Department, London, and the India Supply Mission, Washington, as the case may be. Chemicals, glassware, etc., are procured through Medical Stores Depot. If not available in the depot, they are procured from the open market, inviting sealed quotations prescribing a time limit. Cement is procured directly from factories, gravel, sand and metal from the piece-work contractors.

டாகுமெண்டரி பிலிம்கள்

*101 கேள்வி.—திரு. முனு ஆதி: கனம் செய்தித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1961-62 ஆண்டுகளில் தமிழ்நாடு அரசாங்கம் தயாரித்து வெளியிட்டுள்ள டாகுமெண்டரி பிலிம்கள் எத்தனை?

(இ) இதற்கு செலவிடப்பட்ட தொகை எவ்வளவு?

(உ)) மேலும் எவ்வளவு பொருட்செலவில் எத்தனை படங்கள் எடுக்க உத்தேசம்?

கனம் திரு. கோ. பூவராகன்: (அ) (1) கிராம நலம்,

(2) கல்விச் செல்வம்,

(3) மங்காத ஒளி,

(4) தமிழ்நாடு தழைக்கிறது.

27th February 1964]

ஆகிய நான்கு படங்கள் 1961-ல் தயாரிக்கப்பட்டு வெளியிடப் பட்டன. 1962-ல் ஒரு படமும் வெளியிடப்படவில்லை.

(இ) ரூ. 2,54,917.85.

(உ) தற்சமயம் இரண்டு துணுக்குப் படங்கள் உள்பட 5 படங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. நடைமுதல் ஆண்டில் இந்த வகையில் ரூ. 85,000 செலவாகும் என்று எதிர்பார்க்கப்படு கிறது. 1964-65-ல் ரூபாய் ஒரு லட்சம் செலவிட உத்தேசிக்கப்பட் டிருக்கிறது.

Registration Offices

* 102 *Q.*—Sri N. P. SENGOTTUVELU : Will the Hon. the Minister for Information be pleased to state—

(*a*) whether there is any proposal to electrify all the Registration offices and Sub-Registrar's offices in the State; and

(*b*) if so, the action taken so far?

கனம் திரு. கோ. பூவராகன் : (அ) குடியிருப்பு வீடுகளாகவிராத அரசாங்க கட்டிடங்கள் எல்லாவற்றிற்கும் படிப்படியாக மின்சார இணைப்பு தருவதற்கும், மின்சார விசிறிகள் போடுவதற்குமான திட்டம் ஒன்றை அரசினர் பொதுவாக அங்கீகரித்துள்ளனர். இத் திட்டத்தில் பத்திரப் பதிவுத் துறை அலுவலகங்கள் அமைந் துள்ள கட்டிடங்களும் அடங்கும்.

(இ) பத்திரப் பதிவுத் துறை அலுவலகங்கள் அமைந்துள்ள 266 அரசாங்கக் கட்டிடங்களில் இதுவரை 135 கட்டிடங்களில் மின் சார வசதி செய்யப்பட்டுள்ளது.

Prevention of overload in lorries

* 103 *Q.*—Sri R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether it is a fact that the Lorry-Owners Association, Tirunelveli, has requested the Government to take steps to put an end to the overloading of lorries; and

(*b*) if so, the action taken thereon?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : (அ)—(இ) சபையில் ஓர் அறிக்கை[a] வைக்கப்பட்டுள்ளது.

திரு. து. ப. அழகமுத்து : தலைவர் அவர்களே, மேஜை மீது வைக்கப்பட்டுள்ள அறிக்கையில் மோட்டார் வண்டிகள் சட்டத்தின் 161வது பிரிவின்கீழ் போலீஸ் சூப்பிரன்டென்டுகளுக்கு அதிகாரம் கொடுக்கப்படுவதாக இருக்கிறது. இதில் குற்றம் செய்யாதவர்கள் தண்டிக்கப்படுவதற்கு முன்பு பதிலளிக்கும் சந்தர்ப்பம் இல்லாமல் போய் விடுகிறது. முன்பு R.T.A யிடம் இந்த சந்தர்ப்பம் இருந்தது. போலீஸ்காரர்களிடம் அதிகாரம்

a 65–66-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.